IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

OS NO.147-2010

**DW2 :** பூங்காவனம் S/o. பெரியசாமி, (வயது-59)

**Date :** 23.03.2026

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : -**

நான் ITI படித்துள்ளேன். நான் அசோக் லைலேண்ட் நிறுவனத்தில் பணிப்புரிந்து தற்போது ஓய்வு பெற்று வருகிறேன். நான் 2013ம் ஆண்டு BKR நகரில் வீட்டு மனையை கிரயம் வாங்கினேன். நான் கிரயம் வாங்கி வீட்டு மனையின் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய பிராமண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள சர்வே எண்கள் எனக்கு எப்படி தெரியும் என்றால் 1ம் பிரதிவாதி ரோட்டிற்காக எழுதிக்கொடுத்த தானசெட்டில் மெண்டில் பத்திரத்தில் பார்த்து எனக்கு தெரியும். என்னுடைய கிரயப்பத்திரத்தில் நான் சொல்லும் ரோட்டிற்காக எழுதப்பட்ட தானசெட்டில் மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்தின் வழியாக நான் சென்று வருவதற்கு உரிமை எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் வீட்டு மனையை கிரயம் வாங்கிய போது தானச்செட்டில் மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்தின் வழியாக சாலை இருப்பதாக நான் ஆவணங்களை சரிபார்த்து தெரிந்துக்கொண்டேன் என சொல்வது தவறு என்றால் சரியல்ல. ஓசூர் - முத்தஹள்ளி போகும் சாலையில் இருந்து நாங்கள் கிரயம் வாங்கிய மனை பிரிவுகள் முதலில் உள்ளதா அல்லது VGP Temple Layout முதலில் உள்ளதா என்றால் VGP Temple Layout முதலில் உள்ளது. VGP Temple Layoutக்கு அடுத்து டி நகர் மற்றும் சுந்தரம்மா லேஅவுட் உள்ளது என்றால் சரிதான். சுந்தரம்மாள் லேஅவுட்க்கும் அடுத்து தான் நாங்கள் குடியிருக்கும்

BKR குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான். எனக்கு வீட்டு மனையை கிரயம் கொடுத்த நபருக்கும் 1ம் பிரதிவாதி கிருஷ்ணப்பாவிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல 1ம் பிரதிவாதி ரோட்டிற்காக எழுதிக்கொடுத்த சொத்தின் வழியாகதான் எங்கள் வீட்டு மனைக்கு வழி என கிரயம் கொடுத்தார்கள். நான் கிரயம் பெற்ற வீட்டு மனைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எங்களுடைய வீட்டுமனைகளுக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த சொத்தை சாலையாக காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் உள்ளது. எங்களுடைய வீட்டு மனைகளுக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த சொத்தின் வழியாக சாலை இருந்தால் 1ம் பிரதிவாதி அச்சொத்தை எங்களுக்கு கிரயம் கொடுத்த நபருக்கு கிரயம் கொடுக்க வேண்டும் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் சொத்தை கிரயம் வாங்கிய போது ஆவணங்களை சரிபார்த்தாக சொல்லும் போது 1ம் பிரதிவாதி BKR Layout உரிமையாளருக்கு எழுதிக்கொடுத்த ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் பார்க்கவில்லை.

1ம் பிரதிவாதி பொதுவாக எழுதிக்கொடுத்த செட்டில் மெண்ட் பத்திரத்தை தான் நான் பார்த்தேன். 1ம் பிரதிவாதி செட்டில் மெண்ட் எழுதிய காலத்திற்கு முன்பு வழக்கு சொத்துக்கு 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள உரிமை மூல ஆவணத்தை பார்த்தேனா என்றால் இல்லை. நான் சொல்லும் ரோடு வருவாய் புல வரைப்படத்தில் காண்பித்துள்ளார்களா என்றால் காண்பித்துள்ளார்கள். நான் வீட்டு மனையை கிரயம் வாங்குவதற்கு முன்பு வருவாய் புலவரைப்படத்தை பார்த்தேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி தானசெட்டில் மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தது தவறு என 2010ம்

ஆண்டிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட விவரத்தை 1ம் பிரதிவாதி என்னிடம் சொன்னாரா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த தானச்செட்டில் மெண்ட் பத்திரத்திற்கு முன்பு வழக்கு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது யார் பெயரில் பட்டா உள்ளது என்ற ஆவணங்களை நான் பார்க்கவில்லை. நான் கிரயம் பெற்ற மனைக்கு 1ம் பிரதிவாதி தானச்செட்டில் மெண்ட் எழுதிக்கொடுத்த சொத்து வழியாக செல்லலாம் என சொன்னதாகவும் அந்த சொத்து வழியாக என்னுடைய வீட்டு மனைக்கு சென்று வருவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி சொத்தை அரசாங்கத்திற்கு எழுதிக்கொடுத்தது தவறு என்று அரசாங்கத்தையும் சேர்த்து வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது தவறு. வழக்கு சொத்து சர்வே எண் 50 யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றாலும் 1ம் பிரதிவாதி சொல்லிக்கொடுத்தின் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் உறவினர்களும், தெரிந்தவர்களும் ஊரில் உள்ளார்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் உறவினர்களும் தெரிந்தவர்களும் சாட்சியம் அளிக்க முன்வராத நிலையில் 1ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு தொடர்பில்லாத என்னை அழைத்து வந்து 1ம் பிரதிவாதி சாட்சியம் அளிக்க செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**